தேனி – பழனி செட்டிபட்டி பேரூராட்சித் தலைவர் வி.பி.ஏ. மிதுன் சக்ரவர்த்தி தலைமையில்

# அ.ம.மு.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



**சென்னை, டிச. 24-**

**முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தேனி வடக்கு மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி தலைவரும் - அ.ம.மு.க. கட்சியின் தேனி ஒன்றிய முன்னாள் செயலாளருமான வி.பி.ஏ. மிதுன்சக்ர வர்த்தி தலைமையில் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி கவுன்சிலர்கள் பி.பாண்டீஸ்வரன், எம்.சந்திரா, பி.சுகன்யா மற்றும் அ.ம.மு.க.கட்சி பேரூர் நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.**


முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (23.12.2025) காலை, தேனி வடக்கு மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சித் தலைவரும் – அ.ம.மு.க. கட்சியைச் சேர்ந்த தேனி ஒன்றிய முன்னாள் செயலாளருமான வி.பி.ஏ. மிதுன் சக்ரவர்த்தி தலைமையில், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி 4வது வார்டு கவுன்சிலர் பி.பாண்டீஸ்வரன், 10வது வார்டு கவுன்சிலர் எம்.சந்திரா, 8வது வார்டு கவுன்சிலர் பி.சுகன்யா மற்றும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த பழனிசெட்டிபட்டி பேரூர் இணைச் செயலாளர் செல்வராஜ், அம்மா பேரவை செயலாளர் கலையரசன், அ.ம.மு.க.கட்சியைச் சேர்ந்த 1வது வார்டு செயலாளர் விஜய்கணேஷ், 11வது வார்டு செயலாளர் மாயகிருஷ்ணன், 15வது வார்டு செயலாளர் மாதவன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், எம்.பி., பழனிசெட்டிபட்டி பேரூர் செயலாளர் செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.

தந்தை பெரியார் 52வது நினைவு நாள்:

# முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - இன்று தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!

## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 52வது நினைவு நாளான இன்று (24.12.2025 - புதன்கிழமை) காலை 9.30 மணி அளவில் சென்னை, அண்ணா சாலையில் (சிம்சன் அருகில்) அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

நாள் : 23.12.2025.

**நே.சிற்றரசு,**
செயலாளர்,
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# சென்னை வடகிழக்கு மாவட்டம் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைக்கும் ஒன்றிய அரசையும்,அதற்கு துணை போகும் அதிமுகவையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க (100 நாள் வேலை) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைக்கும் ஒன்றிய அரசையும்,அதற்கு துணை போகும் அதிமுகவையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், சென்னை வடகிழக்கு மாவட்டம் சார்பில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் RS.பாரதி M.A.B.L ExMP, கழக அமைப்பு செயலாளர், டாக்டர் கலாநிதி வீராசாமி MP, எர்ணாவூர் நாராயணன் சமத்துவ மக்கள் கட்சி மற்றும் K.P.சங்கர் MLA., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

24.12.2025 இன்று காலை 9.00 மணியளவில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும் பகுதி, ஒன்றிய, பேரூர் பற்றிய விபரங்கள் பின்வருமாறு

| ஒன்றியம் மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் இடம் | கலந்து கொள்ளும் பகுதி | கலந்து கொள்ளும் தலைமை கழக நிர்வாகிகள் |
|---|---|---|
| தலைமை: G.தயாளன் வில்லிவாக்கம் ஒன்றியம் கரலப்பாக்கம் ஊராட்சி | மாதவரம் தெற்கு பகுதி, திருவொற்றியூர் மத்திய பகுதி, திருவொற்றியூர் மேற்கு பகுதி | **ஆர்.எஸ்.பாரதி** M.A.B.L ExMP, கழக அமைப்பு செயலாளர் |
| | | **மாதவரம் S.சுதர்சனம்** M.A.B.L.,M.L.A., மாவட்ட செயலாளர் |
| | | **G.துக்காராம்** – பகுதி கழக செயலாளர் |
| | | **V.ஆறுமுகம்** – பகுதி கழக செயலாளர் 2வது மண்டல குழு தலைவர் |
| | | **வை.ம.அருள்தாசன்** – பகுதி கழக செயலாளர் |
| தலைமை: C.அற்புதராஜ் புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சி | செங்குன்றம் பேரூர், மாதவரம் வடக்கு பகுதி, | **எர்ணாவூர் நாராயணன்** சமத்துவ மக்கள் கட்சி |
| | | **சிவாஜி கிருஷ்ணமூர்த்தி,** தலைமை கழக பேச்சாளர், |
| | | **D.சுதாகர்** – பேரூர் கழக செயலாளர் புழல் நாராயணன் பகுதி கழக செயலாளர் |
| தலைமை: மீ.வே.கருணாகரன் சோழவரம் ஒன்றியம் காரனோடை ஊராட்சி | திருவொற்றியூர் கிழக்கு பகுதி | **டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி.** |
| | | **கே.பி.சங்கர் எம்.எல்.ஏ.,** திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் |
| | | **தி.மு.தனியரசு** – பகுதி கழக செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் |
| | | **சைதை சாதிக்** – தலைமை கழக பேச்சாளர் |

மேற்படி கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இன்னாள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுக் குழு மற்றும் செயற் குழு உறுப்பினர்கள், மாதவரம் தொகுதி பார்வையாளர் மற்றும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2க்கள், BLC பாகப் பணியாளர்கள், BYA, BDAக்கள், கழகத் தோழர்கள் என அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.




பல்லாவரம் வடக்கு தெற்கு மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி கழக பாக முகவர்கள்(BLA2) ஆலோசனைக் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதிச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ கலந்துகொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி மற்றும் வாக்காளர் சேர்த்த சிறப்பு முகாம்களில் கலந்து கொண்டு வாக்காளர்கள் சேர்த்து குறித்து ஆலோசனைகள் வழங்கினார். அப்பொழுது பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட கழக பிரதிநிதிகள் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## சென்னை மேற்கு மாவட்டம் –

# திருவல்லிக்கணி 119 ‘அ’ வட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

## தீர்மானங்கள் நிறைவேற்றம்!

*சென்னை, டிச.24-*

சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கணி பகுதி 119 (அ) வட்ட கழக சார்பில் ராயப்பேட்டை சேகர் திருமண மண்டபத்தில், நேற்று மாலை சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு வேண்டுகோளின்படி ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் பகுதி செயலாளர் ஆலோசனைப்படி, வட்ட கழக அவைதலைவர் சி.வாசன் தலைமையில், வட்டக் கழகச் செயலாளர் லைனர் கே.பிரபு, மகளிர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள் எஸ். மீனாட்சி சிவக்குமார், க.கற்பகவள்ளி கருனா ஆகியோர் வரவேற்புரையில், மாவட்ட பிரதிநிதி ஏபி.வேலு சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அழகம்மாள்(எ) எஸ்.சித்ரா , மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர், வே.செளந்தர், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோதீஸ்வரன் (எ) மு.அசோக் ஆகியோர் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள், பாக தலைவர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானம் நிறை வேற்றப்பட்டன.

தீர்மானம் 1: ஜனவரி 5 கழக துணை பொது செயலாளர் நாடாளுமன்ற குழு தலைவர் மேற்கு மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு முத்தமிழ்ழறிஞர் கலைஞர் அவர்களின் சி.ஐ.டி.காலனி இல்லத்தில், உள்ள சாலை மற்றும் தெருக்களின் இருபுறமும், இரு வண்ணக் கொடிகள், தோரணங்கள், மின்விளக்குகள், வாசப்படி முகப்புகளில் பூ அலங்காரங்கள் மற்றும் பிறந்தநாள் வாழ்த்த வருகை தரும் கழக உடன்பிறப்புகளுக்கு காலை மற்றும் மதிய உணவு ஆகியவை ஏற்பாடு செய்தல்.

தீர்மானம் 2 :ஜனவரி 5 அன்று அரசு கஸ்தூரிபாய் காந்தி மகப்பேறு குழந்தைகள் மருத்துவமனையில் அன்று பிறக்கும் 58 குழந்தைகளுக்கு தலா ஒரு கிராம் மதிப்புள்ள தங்க மோதிரம், அமைச்சர் பெருமக்களை கொண்டு அனிவித்தல்.

தீர்மானம் 3: S.I.R.தீவிர சிறப்பு வாக்காளர் பட்டியல், பாக தலைவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர், பாக இளைஞர் ஒருங்கிணைப்பாளர அவர்களை வைத்து வீடு வீடாக சென்று விடுபட்ட வாக்காளர், சரிபார்த்தல் மற்றும் சேர்த்தல் ஆகிய ஆக்க பணிகளை, துரி தரமாக செய்தல்.

தீர்மானம் 4: கழக தலைவரும் முதல்வருமான தளபதி ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்நெடுப்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் அ.ராசா வழி காட்டுதலின்படி என்வாக்குச்சாவடி வெற்றிவாக்குச் சாவடி என்ற தலைப்பில்(BLA 2)பாக நிலை முகவர், (BDA)வாக்கு சாவடி டிஜிட்டல் முகவர், (BYO) பாக இளைஞரணி ஒருங்கிணைப்பாளர், பாக தலைவர்கள் கலந்துரையாடல் கூட்டம் இன்று (24.12. 2025 புதன் கிழமை) மாலை 6.00 மணி அளவில், வி பி.ராமன் (லாயிட்ஸ்) சாலை , வி.எம்.தெரு சந்திப்பில், கூட்டம் ஏற்பாடு செய்தல்.

இந்தக் கூட்டத்தில் மாநில தகவல் தொழில்நுட்ப துணை செயலாளரும், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சி.எச்.சேகர் சிறப்புரை ஆற்றினார்.




காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆல்பர்ட் தலைமையில், கண்டோன்மெண்டில் நடைபெற்ற சமத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாநில சிறுபான்மை ஆணைய முன்னாள் தலைவர்கள் பீட்டர் அல்போன்ஸ், பேரருள்பணி வின்செட் சின்னதுரை ஆகியோருடன் இணைந்து கேக் வெட்டி 1,000 கிறிஸ்துவ பெரு மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார்கள்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.77, புளியந்தோப்பு, பி.கே.காலனி திட்டப் பகுதியில் இருந்த பழைய அடுக்குமாடி குடியிருப்பை இடித்து, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி இலக்கிய அணி அமைப்பாளர்

# சி.மூர்த்தியின் சகோதரர் சி.துரைசாமி மறைவு!

## நே.சிற்றரசு – மருத்துவர். எழிலன் நாகநாதன் அஞ்சலி!

*சென்னை, டிச.24-*

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, இலக்கிய அணி அமைப்பாளர் சி.மூர்த்தி அவர்களின் உடன்பிறந்த அண்ணன். சி. துரைசாமி அவர்கள், நேற்று (23-12-2025, செவ்வாய்கிழமை) அதிகாலை 04.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் மறைவு செய்தியறிந்து சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர். எழிலன் நாகநாதன், கிழக்கு பகுதி கழக செயலாளர் மா.பா.அன்புதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் வி.எஸ்.ராஜ், சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மு.சீனிவாசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் துபாய் விஜய், வட்ட கழக செயலாளர் எஸ்.என்.கே.ராமன், துபாய் ராஜேந்திரன், ஜெ.வரதன், பூ.கா.சாமுவேல், கே. காமராஜ், டி.வேல்முருகன், பி.பி.பரிமளம், பிரேம் அயன், மணிவண்ணன், ஆனந்த், வீரவேல், சத்யநாராயணன், சூரியன் சிவா, முருகேசன், சுதாகர், முருகன், பார்த்திபன், ராமுடு, வெங்கடேசன், சிவகுமார், செந்தில், வாசு, ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதி ஊர்வலம். இன்று (24-12-2026 - புதன் கிழமை) காலை 10.00 மணியளவில், அண்ணா அறிவாலயம் பின்புறம் உள்ள, வரதராஜபுரத்தில் இருந்து புறப்பட்டு, மைலாப்பூர் இடுக்காட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்ததுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.